ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

किमासेव्यं पुंसां सविधमनवद्यं द्युसरितः
किमेकान्ते ध्येयं चरणयुगळं कौस्तुभभृतः ।
किमाराध्यं पुण्यं किमभिलषणीयं च करुणा
यदासक्त्या चेतो निरवधि विमुक्तौ प्रभवति ॥

புமான்களுக்குஸேவிக்கத்தகுந்ததுஎது? தேவநதியானகங்கையினுடைய சிரேஷ்டமான சமீபப்பிரதேசம், ஏகாந்தத்திலிருந்து கொண்டு தியானிக்கத் தகுந்த வஸ்து எது? கௌஸதுப மென்னும் இரத்தினத்தினல் விளங்கும் மார்பையுடைய ஸ்ரீ மஹநாராயணனுடைய இரண்டு சரணங்களே. நாம் அனுஷ்டிக்க வேண்டியகர்மா யாது? சாஸ்திரங்களாலும் சான்றோர்களாலும் புகழப்படும் புண்யகர்மா. நம்மால் விரும்பத்தகுந்தது எது? கருணை, அஃதாவது பிறர் படும் துன்பத்தை ஸகிக்காமல் தன்னுலியன்ற வரையில் உதவிபுரிதல். பின்னும் எவ்வித மார்க்கங்களில் சித்தத்திற்குப்பற்றுதலேற் பட்டால் அதன் தோஷம் விலகி மோக்ஷமென்கிற உத்தமமான பதவியை யடையத்தகுதியாகுமோ அவ்வழிகளில் செல்லவேண்டும்.

இவ்வுலகில் மானிடப்பிறவியை யடைந்த நம்போன்றவர்களின் க்ஷேமத்தைக் கருதி கருணா நிதியான ஓர்மஹான்கூறுகின்றார். எப்பொழுதும் புண்ணிய தீர்த்தங்களினருகில்வசித்துக்கொண்டு தமக்கேற்பட்ட கடமையைச்சரிவர அனுஷ்டித்துவரவேண்டும். பகவானான ஸ்ரீ வைகுண்டவாஸியினுடைய சரணகமலங்களைத் தனியாய் ஏகாந்தத்திலிருந்து தியானிக்க வேண்டும். புண்ணியம் சம்பாதிப்பதிலும்பிறரிடம்கருணைபாராட்டுவதிலும் எப்பொழுதும் ஊக்க மிருக்கவேண்டும். நம் மனதை எம்மாதிரி பழக்கிக்கொண்டு வந்தால் மோக்ஷமார்க்கத்தில்தானாகச்செல்லக்கூடிய யோக்கியதை அதற்கு ஏற்படுமோ அவ்வழிகளில் அதைப்போகும்படி செய்யவேண்டும் இவ்விதம் ஒருவன் சரியாய் நடந்து வருவானுகில் இவ்வுலகிலும், பரலோகத்திலும் விசேஷமான சிரேயஸ்ஸையடைவான்.

சரணமடைந்தோரைப் பாதுகாப்பதே சிறந்த தர்மம்.

धर्मे प्रकथितेचास्मिन् शरणागतरक्षणे ।
कथ्यते तुर्यभागेऽद्य कपोतस्य कथाऽनघा ॥

वातवर्षो महानासीन्नचागच्छति मे प्रिया ।
किन्नु तत्कारणं येन साऽद्यापि न निवर्तते ॥
अपि स्वस्ति भवेत्तस्याः प्रियाया मम कानने ।
तया विरहितं हीदं शून्यमद्य गृहं मम ॥

" இன்றையதினம் காற்றும் மழையும் அதிகமாயிருக்கின்றது. நம்முடைய பிரியையானவள் இதுவரையில் வரவில்லை. எவ்விதம் யோஜித்தாலும், இதற்குக் காரணம் புலப்படவில்லையே; இக்கானகத்தில் அவள் சௌக்கியமா யிருக்கிறாளா வென்று கூட சங்கிக்க வேண்டியிருக்கிறது.

நம்பார்யை யன்றியிலிருக்கும் இந்தகிருகமானது சூன்யமாகத்தோன்றுகிறது. புத்திரன், மித்திரன், பந்து, சேவகர்கள் முதலானவர்களால் கிரகம் நிரம்பியிருப்பினும் இல்லாளில்லாவிடின் கிரஹஸ்தனுக்கு அவ்வில்லம் சூனியமாகவே தோன்றும். இக்கருத்தையே,

न गृहं गृहमित्याहुर्गृहिणी गृहमुच्यते ।
गृहं तु गृहिणीहीनमरण्यसदृशं भवेत् ॥

கேவலம் வீட்டிற்கு மாத்திரம் கிரக மென்றும் பெயரல்ல, கிருஹிணீ என்கிற பார்யைக்கே அப்பெயர் வாய்ந்ததென்றும்,

அவ்வித கிருஹணீயில்லாத சூன்யமான கிரஹமானது ஆரண்யத்திற் கொப்பாகும் என்று சான்றோர் கருதியுள்ளார். மிகவும் இனிமையான குரலுடன் கூடிய நம்பத்தினியானவள் இப்பொழுது இங்கு வாராமலிருப்பாளாகில் நாம் ஜீவனுடனிருப்பதில் யாது பயன்? அவளுடைய சிறந்த குணங்களை என்னென்றுரைப்பேன். அவள் எனக்குஸ்நாநம், ஆகாரம், முதலியவைகளைச்செய்து வைத்த பின்னரே, தான்செய்யத்தொடங்குவாள். நான் உட்காராமல் அவளும் உட்காமாள். நான் நித்திரை செய்தபின்பே அவள் உறங்குவாள். நான் சந்தோஷித்தால் அவளும் சந்தோஷிப்பாள். நான் துக்கித்திருந்தால் அவளும் துக்கித்திருப்பாள். கார்ய நிமித்தமாய் நான்வெளியிற் சென்றாலும் வாடின முகத்துடனிருப்பாள். நான்கோபத்துடனிருந்தால் பிரியமாய்ப்பேசுவாள். அதிகமாய்க் கூறுவதால் யாது பயன்?

पतिधर्मव्रता साध्वी प्राणेभ्योऽपि गरीयसी ।
यस्य स्यात्तादृशी भार्या धन्यस्स पुरुषो भुवि ॥

எவனுடைய பார்யையானவள் பதியின் நோக்கத்தின்படி நடப்பதென்கிற தர்மத்தை விரதமாகக்கொண்டும் உத்தம குணங்களுடனும் விளங்குகின்றாளோ அவள் பிராணனைக் காட்டிலும் சிறந்தவள். அவ்விதஸ்திரீயை மனையாளாக வடைந்தபுமானே தன்யனாகிறான் என்றும் வியாஸபகவான் கூறியிருக்கிறார்)

இவ்வித நற்குணம் பொருந்திய என்பார்யையானவள்ஒரு சமயம் நான் வெளியில் சஞ்சரித்து மிகக்களைப்புற்று பசியால் பீடிக்கப்பட்டு வருந்துங்கால் அவளும் ஆறுத்துயரத்துடன் என்மீது அன்பு பாராட்டி பேரவாவுடனும், பக்தியுடனும் சிறிது நேரத்தில் கஷ்டங்களனைத்தையும் நீக்குவாள், யாவரும் புகழத்தக்க நன்னடக்கை யுடைய மனைவியுடன் மரத்தில்வசிப்பினும் அதுதான் கிரகம், உயர்ந்த பலமாடிகளுடன் கூடியசிறந்த அரண்மனையாயிருப்பினும், இத்தகைய இல்லாள் இல்லாளேயாமாயின் அஃது அரண்யமேயாகும்.

वृक्षमूलेऽपि दयिता यस्य तिष्ठति तद्गृहम् ।
प्रासादोऽपि दयाहीनः कान्तार इति निश्चितम् ॥

மேலும் தர்மார்த்த காமமென்னும் புருஷார்த்தங்களும் உத்தம ஸ்திரீகளாலேயே நடைபெற வேண்டும். தீர்த்தயாத்திரை முதலான காரியங்களை யுத்தேசித்து வேறு பிரதேசங்களுக்குச் சென்றாலும், பிணியினால் வருந்துங் காலத்தும் பார்யைபோன்ற மித்திரன் கிடைப்பதரிது. இவ் வுலகிலோ, பரலோகத்திலோ, எவ்வித சுகத்தை விரும்பினாலும் அதற்கு பார்யையே முக்கிய ஸாதனம்,

यस्य भार्या गृहे नास्ति साध्वी च प्रियवादिनी ।
अरण्यं तेन गन्तव्यं यथाऽरण्यं तथा गृहम् ॥

எவனுக்கு சிறந்த குணமுடையவளும் பிரியமாய்ப் பேசுகிறவளுமான மனைவி கிரகத்திலில்லையோ, அவன் ஆரண்யத்தையடையலாமென்றும், பத்னியில்லாத கிரகத்திற்கும் ஆரண்யத்திற்கும் வேற்றுமை யில்லை என்றும், தன் மனையாளைக் காணாத துயரத்தினால் பலவாறாகப் புலம்பலுற்றது. இதனைச்செவியுற்ற மரத்தினடியில் கிராதனது கூட்டிலிருந்த அப் பெண்புறா பின் வருமாறு ஆலோசித்தது. நான் நன்னடக்கை யுடையவளோ அல்லது கெட்ட நடத்தை யுள்ளவளோ எவ்விதமிருப்பினும் என்னுடைய பதி பிரியத்துடன் எனது குணங்களைப்பற்றிப் புகழ்ந்துபேசுகிறார். அதனால் நான் மிகவும் பாக்கியசாலி யாகிறேன். உலகில் எந்தஸ்திரீயின் நடத்தையால் பர்த்தா சந்தோஷிக்கிறானோ அவள்தான் ஸ்திரீ என்று சொல்லத்தகுந்தவள். ஸ்திரீகளிடத்தில் பர்த்தாவுக்கு சந்தோஷமேற்பட்டால் அதனால் சகலதேவதைகளும் சந்தோஷித்து அநுக்ரஹிக்கிறார்கள்.

सा हि स्त्रीत्यवगन्तव्या यस्या भर्ता तु तुष्यति ।
तुष्टे भर्तरि नारीणां तुष्टास्युस्सर्वदेवताः ॥

என்று கூறப்பட்டிருக்கிறது. (தொடரும்)

மறு பிறப்பு.

அ-வது ஜீவன் ஸோமானுய் ஆகிருன்.

(கூஎ0-வது பக்கத்தொடர்ச்சி.)

சாந்தோக்யத்தின் மந்திரத்தின் கடைசியில் ஜீவன்கள் வரிசையாய்ச் சந்திரனை அடைகிறார்களென்றும், அங்கு இந்த ஜீவன் ஸோமராஜனுய் ஆகிருனென்றும், அவன் தேவர்களுக்கு அன்னமென்றும், அதனுல் அவனை தேவர்கள் பக்ஷிக்கிறார்களென்றும், முடிவு பெற்றுளது. இப்படியாகும்போது இவன் சந்திர லோகமென்ற ஸ்வர்க்கலோகம் போனவுடன், அவனை தேவர்கள் பங்கிட்டுக்கொண்டு புசித்துவிடுகிறார்கள். இதுவா ஸ்வர்க்கஸௌகம்? இதற்காகவா இஷ்டாபூர்த்தம் யக்ஞம் முதலிய புண்யகன்மம் செய்யப்பட்டது? நாரகிகளான ஜீவர்களைக் காட்டிலும், பலமான கஷ்டமல்லவா இவர்களுக்கு வந்து விட்டது? இந்த ஸ்வர்க்கம் நமது சத்துருக்களுக்குக் கூட வேண்டாமென்று சொன்னுல் இங்கு நியாயமான பதிற் கூறுவாம். இங்கு அன்னமாக சந்திரனை அடைந்த ஜீவர்கள் ஆகிருர்களென்று சொன்னதனுல், இவர்கள் சாப்பிடும் அன்னமாகவே ஆய்விடுவதான தாத்பர்யமில்லை. அப்படியிருப்பின் ஸ்வர்க்கம் விரும்புபவன், ஜ்யோதிஷ்டோம யாகம் செய்யவேண்டு மென்று சொல்லும் சுருதியெல்லாம் வஞ்சனையான வாக்யமாய் முடியும். சுருதியோ நம்மை அனுக்கிரகிப்பதற்காக அனுதிகாலமாய் நித்யமாய் இருப்பதால், ஸ்வர்க்கத்தில் ஆசையுள்ளவன் ஜ்யோதிஷ்டோமயாகம் செய்தால்தான் கிடைக்குமென்றெல்லாம் சொல்லி மோசமாய் நம்மை தேவர்களுக்கு பலிகொடுக்கவா ஏற்படும்? சிவ சிவ இந்த எண்ணமே நமக்குக் கூடாமையால், இதன் உண்மையை யறிவாம். அன்னம் என்று சொன்னுல் சாமான்யமாய் சாப்பிடக் கூடியதென் றுனபோதிலும், போகம் என்றும் அர்த்தம் கொண்டிருக்கிறது. எவ்விதமெனில் அரசர்களுக்கு வைசியர்கள் அன்னம். வைசியர்களுக்குப் பசுக்கள் அன்னம் என்றி

ருக்கிறது, இங்கு க்ஷத்திரியர்கள் வைசியர்களை விழுங்குகிறார்கள், வைசியர்கள் பசுக்களை சாப்பிட்டுவிடுகிறார்களென்று அர்த்தம் கூறுவது? அப்படியல்ல. மற்று க்ஷத்திரியர்கள் வைசியர்களாலும், வைசியர்கள் பசுக்களாலும் சுகத்தை அடைகிறார்களென்பது எப்படிப் பொருந்துமோ; அப்படியே சந்திரமண்டலத்திலும் இஷ்டாபூர்த்தம் முதலிய புண்யகன்மத்தினால் சென்றிருக்கிற ஜீவன் தேவர்களுக்கு அன்னமென்றும், அவனை அவர்கள் புசிக்கிறார்களென்றும் சொன்னால், தேவர்கள் அவனுடனும் அவன் தேவர்களுடனும் சுகத்தை அனுபவிக்கிறான் என்று அர்த்தமே யொழிய, கொழுக்கட்டை சாப்பிடுவது போலும், முறுக்குத் தின்பது போலும் தின்றுவிடுகிறார்களென்பதல்ல. ஏனெனில், சாந்தோக்யோபனிடதத்தில் "தேவர்கள் சாப்பிடுகிறதில்லை. நீரருந்துவதுமில்லை. இந்த அமிர்தத்தைப் பார்த்தே திருப்தி யடைந்துவிடுகிறார்கள்" என்று கூறியிருக்கிறது. ஆதல்பற்றியே நாமும் நமது வீட்டிற் பக்குவம் செய்யப்படும் அன்னம் முதலியவற்றை ஸ்வாமிக்கு நிவேதனம் செய்ய வேண்டுமென்றே சொல்கிறோமே தவிர, போஜனம் செய்விக்கிறோமென்று சொல்லும் வழக்கமல்ல. ஸ்வாமி சாப்பிடுவதென்றாரம்பித்தால் நம்மால் போட்டுமுடியுமோ? உலகமே போதாதென்பது வேறு விஷயம். இதிருக்கட்டும். ஆகவே சந்திரமண்டலத்தில் தேவர்களுக்கு உபபோகத்திற் கேற்பட்டு அதன் மூலமாய் நாமும் சுகமடைகிறோம். ஆனால் சந்திரமண்டலத்தை அடைந்த ஜீவர்கள் சுகத்தை அனுபவிக்கிறார்களென்று மட்டிலும் சொன்னால் போதாதா? எதற்காக தேவர்களையும் சொல்லி அவர்களால் அனுபவிக்கப் படுவதாய்க் கூறல்வேண்டுமென்றால் அதைக் கூறுவாம். பிருகுதாரண்யகத்தில் பிர்மம் தான் முதலில் இருந்தது. அது நான் பிர்மம் என்று தன்னை அறிந்துகொண்டது. அதனால் அது எல்லாமாக ஆயிற்று. ஆகையால் தேவர்களுக்குள் யார்இப்படி அறிகிறாரோ, அவர் அதுவாகவே ஆயினர். அப்படியே ரிஷிகளுக்குள்ளும். அப்படியே மனிதர்களுக்குள்ளும். ஆகையால் இதைப்பார்த்து வாமதேவரிஷியும்

நான் மனுவானேன் சூர்யனுமானேன் என்றார். ஆகையால் இப்போதும் எவனெவன் இவ்விதம் நான் பிர்மம் என்று எண்ணுகிறானோ, அவன் எல்லாமாய் ஆவான். அவனது மகிமைக்கு தேவர்களும் நிகரல்ல. ஏனெனில் அவன் எல்லாவற்றிற்கும் ஆன்மாவாகவல்லவா இருக்கிறான். இனி எவன் நான்வேறு, தேவன் வேறு என்று அறிகிறானோ, அவன் அறிந்தவனல்லன். அவன் பசு. அவன் தேவர்களுக்குப் பசு. எவ்விதம் அனேக பசுக்கள் மனிதனை அண்டியிருக்குமோ, அதுபோல் ஒவ்வொரு மனிதனும் தேவர்களை அண்டிப் பிழைக்கிறான். ஒரு பசு குறைந்த போதிலும் எப்படி மனிதனுக்கு பிரியக்குறைவு ஏற்படுமோ, அவ்விதமே ஒருமனிதன் குறைந்தாலும் தேவர்களுக்குப் பிரியக்குறைவுதான். அதாவது மனிதன் பிர்மக்ஞானத்தை அடைவதில் தேவர்களுக்கு ஸம்மதமில்லை. ஆதல்பற்றியே இந்த மந்திரத்திலே பாஷ்யகாரர் இவ்விதம் கூறுகின்றனர். பிர்மவித்யா பலனை அடையப்போனால், அம்மனிதனுக்கு தேவர்கள் விக்னம் செய்வார்கள். ஏனெனில் தேவர்களிடத்திலிருந்து கடன் வாங்கிக்கொண்டே மனிதன் பிறந்திருக்கிறான். அக் கடனைத் தீர்த்தாலொழிய அவனை விடமாட்டார்கள். அக் கடனை எப்படித் தீர்ப்பதென்றால், பிர்மசர்யத்தினால் ரிஷிகளது கடனையும், யக்ஞத்தினால் தேவர்களுடையதையும், பிரஜையினால் பிதிருக்களது கடனையும், தீர்க்கவேண்டும். அப்படித் தீர்க்காவிட்டால் விடமாட்டார்களென்றார். ஆகவே நாம் அவர்களது ஆதீனமாய்த்தானிருக்கிறோம். ஆதல்பற்றியே கீதாசார்யரும்

देवान् भावयताऽनेन ते देवा भावयन्तु वः ।
परस्परं भावयन्तः श्रेयः परमवाप्स्यथ ॥

இந்த யக்ஞத்தினால் தேவர்களை கௌரவப் படுத்துங்கள். அத் தேவர்களும் உங்களை கௌரவப் படுத்தட்டும். இவ்விதம் ஒருவருக்கொருவர் கௌரவப் படுத்திக்கொண்டு பரமசிரேயஸ்ஸை அடையுங்கள் என்றார். இதனால் தேவர்களுக்கு நாம் ஆதீனப்பட்டோம். அதுமூலம் அவர்கள் நமக்காதீனப் பட்டார்கள்'

இப்படி அவர்கள் கடனைத் தீர்த்தால், அதினின்றும் பிறகு மோக்ஷமுண்டு. இல்லாவிடில் ஒருபோதும் பரமாத்ம ஞானமே கிடைக்காதென்பதையே श्रेय: परमवाप्स्यथ பரம சிரேயஸ்ஸை அடையுங்கள் என்ற வாக்கியத்தாற் காட்டினார். இங்கு பரம சிரேயஸ் என்பது மோக்ஷத்தையே குறிக்கிறதென்பதை அறியவும்.

ஆகவே இதனால் நமக்குப்பிரகிருதத்தியிலேற்பட்டதென்னவென்றால் தேவர்களும் நாமும் பரஸ்பரம் கட்டுப்பட்டே இருப்பதால், சந்திரமண்டலம் சென்ற ஜீவன் தேவர்களுடன் சுகமனுபவிக்கிறானென்றுதான் சொல்லவேண்டுமேயொழிய வேறு வழியில் இவர்களுக்குச் சுகமில்லையென்பதைக் காட்டத்தான் அங்கு தேவர்களுடன் சுகமனுபவிக்கிறானென்று சுருதி கூறிற்றென்று கொள்க. இவ்விதம் கன்மாவைச் செய்கிறவர்கள் அடையும் கதியைக் கூறினேன். இனி கன்மத்தின்பிரிவையும் அதன் கதியையும் கூறுவேன்.

கூ-வது கர்மத்தின் கதி.

ஆசார்யாள் கன்மம் இருவகைப்படும் என்று காட்டுகின்றார்.

नित्यं च कर्म द्विविधं संस्कारकं विविदिषा जनकमिति । विहितत्वमात्रबुध्या क्रियमाणं संस्कारकम् । ईश्वरार्पणबुध्याक्रियमाणं विविदिषामुत्पाद्य अवश्यं वेदनं सम्पादयति ॥

நித்ய கன்மாவென்பது இருவகைப்படும். ஸம்ஸ்காரமென்றும் விவிதிஷையை உண்டுபண்ணக் கூடியதென்றுமாம். சாஸ்திரத்தில் நம்மைச் செய்யும்படி விதித்திருக்கிறது என்று பக்தியோடு செய்யப்படும் கன்மாவிற்கு ஸம்ஸ்கார கன்மா வென்று பெயர். இக்கன்மாவில் ஈசுவரன் திருப்தியடையட்டும் என்று அதன் பலனை ஸ்வப்பனத்திலும் எதிர்பாராமல் தனக்குக் கிடைத்தபோதிலும் அதைப் பொருட்படுத்தாது செய்துகொண்டிருக்கும் கன்மா தான் விவிதிஷையை உண்டுபண்ணி அவசியம் ஞானத்தை உண்டுபண்ணும் என்று சொன்னபடி நித்யகர்மா

வைச் செய்தவர்கள் அர்ச்சிராதி மார்க்கத்தையே அடைவார் களென்றும், அம்மகானை ஆஹுதிகள் எதிர்கொண்டு வந்து சூர்யனது கிரணங்கள் மூலம் கொண்டுபோகின்றன வென்றும், போகும்போது அநேக புண்ய லோகங்களில் இளைப்பாறச் செய்து இந்த உலகங்கள் நீங்கள் புண்யத்தினுல் சம்பாதித்த லோகங்களென்றும், மரியாதையாய்ச் சொல்லிக்கொண்டு ஸத்யலோகத்திற் சேர்த்துவிடுகின்றன வென்றும், சுருதி கூறுகின்றது. இவ்விதம் ஸத்யலோகத்தை அடைந்தவனும் இம்மனித லோகத்திற்குத் திரும்பமாட்டான். ஏனெனில் பூமிக்கும் சந்திரனுக்கும் ஸம்மந்தம் அதிகமாய் உண்டு. அதனுல்தான் இங்குள்ள பூமிபோல் அங்கும் ஜலம் மலைகளுமிருக்கின்றன வென்று வானசாஸ்திரக்காரர் கூறுகின்றனர். ஆகவே பூமிக்கு இருக்கும் ஆகர்ஷணசக்தி யென்பது சந்திரலோக பரியந்தம் உண்டென்றும் நிச்சயம். ஆதலால் இங்கிருந்து சந்திரலோகம் போனவன் அங்கு வஸிக்கக் காரணமான கன்மம் குறைந்தவுடன் இங்குதான் திரும்புவான். இந்த ஜீவனுக்கு மறுபடியும் பூமியில் முளைக்க சக்தியுமிருக்கிறது. ஞானமடைந்த ஜீவனேவென்றால், சந்திரமண்டலத்தை அடையாமல் அதைத்தாண்டி சூர்ய மண்டலம் போய்விடுகிறபடியால் அந்த ஜீவனை பூமி இழுக்கவும் மாட்டாது. இறங்கினுல் முளைக்கும் சக்தியுமில்லை. இவ்வபிப்ராயத்தையே நம் பரமாசார்யாள்

> बीजान्यग्न्युपदग्धानि न रोहन्ति यथा पुनः ।
> ज्ञानदग्धैस्तथा क्लेशैः नाऽऽत्मा सम्पद्यते पुनः ॥

நெருப்பில் வருக்கப்பட்ட விதைகள் எப்படி மறுபடியும் முளைக்காதோ, அவ்விதம் ஞானத்தால் வருக்கப்பட்ட ஜீவன் ஜனனமெடுக்காதென்றார். இவ்விதம் நடுவழியில் பாபதிற்குத் தகுந்த நாகங்களை அனுபவித்துவிட்டுத்தான் சந்திரமண்டலம் போவானென்பது தெளிவாய் நின்றது. அச் சந்திரலோகமென்ற ஸ்வர்க்கலோகத்திற் புண்யம் உள்ளவரை அனுபவிப்பான். பிறகு இதே பூலோகத்திற்குத் திரும்புவானென்று சொன்னேன். இனி அச் சீவன் எப்படித் திரும்புவான், முதலில் எங்கிறங்குவான் என்பதைப்பற்றி விசாரிக்கத் தொடங்குவாம்.

எம். என். சுப்பிரமணியசாஸ்திரிகள்,

ஆர்யஸமாஜத்தின் கொள்கை வைதிக ஸம்மதமல்ல.

(1923 ஹு ஜுன் மீ 1, 2, 3 ௳) களில் மலையாளத்தில் ஆர்ய ஸமாஜப்ரசாரம் செய்து வருகிறவரான ஸ்ரீ ரிஷிராம் அவர்கள் தஞ்சாவூரில் செய்த மூன்று உபன்யாஸங்கள்.

உபன்யாஸச் சுருக்கம்.

ஹிந்துமதம் க்ஷீணதசையில் இருக்கிறது. ஒற்றுமையை இழந்துவிட்டது. வேதம் ஓர் சிறந்த கிரந்தம். அதின் அர்த்தத்தை ஹிந்துக்கள் நன்கு அறியவில்லை. ஆர்ய ஸமாஜத்தை ஏற்படுத்தின ஸ்வாமி தயாநந்தஸரஸ்வதி அவர்கள், வேதத்தின் ஸத்யார்த்தத்தை வெளியிட்டார். அந்த ஸமாஜத்தைச் சேர்ந்தவர்கள், ஐக்கியத்தில் பெயர் போனவர்கள். இணைந்திருந்து ஹிந்துக்களுக்குப் பலவிதத்திலும் உபகாரம் செய்கிறோம். நாங்கள், ஹரித்வாரம் முதலான இடங்களில் குருகுலம் ஏற்படுத்தி பல பிள்ளைகளுக்குக்கல்வி பயிற்றி வைக்கிறோம். பெற்றோரற்ற அனாதைப் பிள்ளைகளைப் பாதுகார்க்கிறோம். விதவைகளுக்கு ஆச்ரமம் ஏறபடுத்தி அவர்களை இரக்ஷிக்கிறோம். வேதத்தை எல்லோரும் அறிந்து, அதின் இரஸத்தை அனுபவிக்கும்படி உதவி செய்கிறோம்.

உங்கள் தேசத்திற்கு அதிஸமீபத்திலுள்ள மலையாளப்ரதேசத்தில் சென்ற வருஷம் வெறிபிடித்த மஹம்மதியர்கள் கலகம் செய்கையில், அவர்கள் ஆயிரக் கணக்கான ஹிந்துக்களைப் பலவந்தமாய் துருக்கராக்கினார்களே! அநேகம் குழந்தைகளைக் கொன்றார்களே! அநேகம் ஹிந்துக்கள் அனாதையாய்த்தவித்து நின்றார்களே! உங்களுக்கு உணர்ச்சி ஏற்படவில்லையே! உங்கள் ஸஹோதரர்கள் தவிக்கும்போது நீங்கள் அவர்களுக்கு என்ன உதவி செய்தீர்கள்? ஆயிரம் மைலுக் கப்பாலுள்ள பஞ்சாப் நாட்டிலிருந்து நாங்கள் கேள்விப்பட்டதும் ஓடிவந்து ஆயிரக்

கணக்கான பொருளைச்செலவுசெய்து, அனாதைகளுக்கு அன்ன வஸ்த்ரம் அளித்துக் காப்பாற்றினோம். இன்னமும் காப்பாற்றுகிறோம். நீங்கள் திரவிய ஸஹாயம்கூடச் செய்யவில்லையே! ஹிந்து மதம் இறந்துவிட்டதே! உயிர் இல்லையே! உங்கள் பிள்ளைகளைக் கிறிஸ்தவ மிஷனரிகளிடம் ஒப்புவிக்கிறீர்கள். ஆர்ய ஸமாஜத்தார் என்றால் பயப்படுகிறீர்கள். பாதிரிகளிடம் எவ்வளவு பிள்ளைகளை இழந்து விட்டீர்கள். உங்களிடம் பணம் இல்லையா?. நீங்கள் ஏன் ஸொந்தப் பள்ளிக்கூடங்கள் வைக்கக்கூடாது? உங்கள் பெண்களையும் அவர்களிடம் ஒப்புவித்து விட்டீர்களே! தர்மம் அழியப்பார்க்கிறீர்களே! மதத்தை உங்கள் குழந்தைகளுக்குப் போதிக்க என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்? மதத்தின் அழிவைக் கவனிக்கவில்லையே! ஏன்? உங்களில் எத்தனைபேர் வேதத்தை வாசிக்கிறீர்கள்? அந்தச் சிறந்த ஞானப் பொக்கிஷத்தை ஏன் திறப்பதில்லை? மதஉணர்ச்சி அற்றுவிட்டதே!

ஸ்வாமி தயாநந்தர் காசியில் வேதத்தைப்பற்றி உபன்யஸித்தார். அப்பொழுது வேதத்தில் கூறியுள்ள அக்னி, இந்திரன் முதலிய தெய்வங்களெல்லாம் ஒரு நிர்க்குணப்ரமத்தையே குறிக்கிறது என்றும், விக்ரஹாராதனையைப் பற்றிச் சொல்லவில்லையென்றும், உபன்யஸித்தார்.

புனப்ரவேசம்.

பிற மதத்தைப் பற்றியவர்களை, மீண்டும் சுத்திசெய்து நம் மதத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும். வேதம் ஈசுவரனால் கொடுக்கப்பட்டது. வேதம் ஸத்யம். ஆகையினால் எல்லாருக்கும் பொதுவாகத்தான் கொள்ளவேண்டும். வேதம் எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டியதென்று உபதேசிக்கிறோம். நம் மதஸ்தர்களே அன்ய மதத்தைச் சேர்ந்தவுடன், நமக்கு விரோதிகளாகிறார்கள். இப்பொழுது மலையாளத்தில் ஹிந்துக்களை வதைத்தவர்கள் எல்லோரும் கொஞ்ச நாட்களுக்கு முன் ஹிந்துக்களாயிருந்து ஹைதர் மகன் திப்புஸுல்தான் காலத்தில் பலவந்தமாய்த் துருக்கர்களானவர்கள் தானே! புனப்ரவேசம்

அநுஷ்டிப்போமானால், நம் நாட்டில் விரோதிகளில்லாமல் சிநேகமாக்கிக் கொள்ளலாம்.

புனர் விவாஹம்.

உங்கள் தேசத்தில் எவ்வளவு இளம்விதவைகளை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். எங்கள் ஸமாஜத்தில் விவாஹம் செய்து விடுகிறோம். இதை கவனிக்கவேண்டியது அவசியமே.

ஸமாஜ ஸ்தாபனம்.

பஞ்சமர்களை முன்னுக்குக் கொண்டுவரலாம். பிற மதத்தை அநுஷ்டிக்கிறவர்களுக்கு நம் மதத்தில் பிரவேசஞ் செய்யலாம். அனாதை ஆச்ரமம், வித்யாலயம் ஏற்படுத்தி உபகாரம் செய்யலாம். இவைகளுக்கு ஆர்ய ஸமாஜத்தின் கிளைஸ்தாபனம் செய்யலாம்.

ஸம்பாஷணை.

அடியேனுக்கும் ஸ்ரீ ரிஷிராம் அவர்களுக்கும் அம் மூன்று நாட்களிலும் ஸம்பாஷணை வாதம் நேர்ந்தது.

ரிஷிராம்.—இந்த ஊரிலுள்ள பண்டிதர்களுடன் வாதஞ்செய்ய விரும்புகிறேன். ஏற்பாடு செய்கிறீர்களா!

ஸாரம்.— பண்டிதர்களுடன் வாதம் எதற்கு?

ரிஷி.— ஆர்யஸமாஜத்தின் அபிப்ராயத்தைப் பற்றி ஸித்தாந்தம் செய்வதற்கு.

ஸாரம்.— ஸ்வாமி தயாநந்தர் இருக்கையிலேயே, எங்கள்நாட்டு மஹா பண்டிதராகிய சிறிதுகாலத்திற்குமுன் பரமபதமடைந்த, பிரும்மஸ்ரீ இராமசுப்பாசாஸ்திரிகள் அவர்கள் கல்கத்தாவில் கூடிய ஸபையில் ஆர்யஸமாஜத்தின் அபிப்ராயங்களைத் தவறு என்று ரூபித்துக் கண்டித்தார். அவாள் "தயானந்த கண்டன கோடனம்" என்ற கிரந்தத்தை வாசித்து அரங்கேற்றினார். அந்தப் புஸ்தகத்தின் நகல் ஒன்று எனக்கு அனுப்பும்படி சாஸ்திரிகள்வாள் குமாரரைக் கேட்டிருக்கி

றேன். ஒரு வாரத்தில் வரும். அதைக் கொடுக்கிறேன். நீங்கள் பதில் சொல்லலாம். மறுபடியும் பண்டிதர்களுடன் தர்க்கம் வேண்டியதில்லை.

ஆர்ய ஸமாஜத்திற்கும் ஆர்ய மதத்திற்கும் முக்கிய பேதம் என்ன?

ரிஷி.— நீங்கள் பிறப்பினால் ஜாதிஎன்கிறீர்கள். நாங்கள் குணத்தினால் ஜாதிப்பிரிவு என்கிறோம்.

ஸாரம். குணத்தால் எவ்விதம் பிரிப்பீர்கள்?

ரிஷி.— பொறுமை, மெய்மை முதலிய சிறந்த குணங்களுக்கும் தாழ்ந்த ஸ்வபாவத்திற்கும் தகுந்தபடி பிரிக்கிறோம். தொழிலைக்கொண்டும் பிரிக்கிறோம்.

ஸாரம்.— ஒரு வாழ் நாளில் ஒருவன் தொழிலைப் பலவிதமாக மாற்றிக் கொள்கிறானே!

ஒருவனுடைய குணங்கள் அநேகமாக நாளுக்கு நாளும் மாறி வருகிறதே! மேலும், ஸ்ருஷ்டிக்கப் பட்டிருக்கிற பொருள்களுக்கு ஸத்வ, ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்கள் உண்டென்று வேதம் சொல்லுகிறதே. நம்முடைய உடல்பாகம் இம் முக்குணங்களில் எக்குணம் வலுத்திருக்கிறதோ, அதற்குத் தகுந்தபடி ஜாதிப்பிரிவு இயற்கையாய் ஏற்படுகிறதை ஒப்புக் கொள்ளவில்லையா?

ரிஷி.— ஆம் ஒப்புக்கொள்கிறோம். இந்த குணத்திற்குத் தகுந்தபடிதான் பிரிக்கவேண்டும்.

ஸாரம்.— ஒரு உடல் ஸத்வாதிக்யமா, தாமஸ குணாதிக்யமா என்று அறிய தராசு படிக்கல் உண்டா? அவ்விதம் பிரிப்பது அஸாத்யமாச்சுதே?

ரிஷி.— வர்ணம் உடலுக்கா? ஜீவனுக்கா?

ஸாரம்.— உடலுக்குத்தான் வர்ணம். பக்குவமடைந்த ஜீவன் தாமஸகுண வர்ணத்தில் ஜனிக்காது. பக்குவமடையாத

ஜீவன் ஸத்வகுண மதிகமுள்ள உடலை எடுக்காதல்லவா? ஜீவனைப்பற்றித் தனியே பேசவேண்டியதில்லையே.

आत्मा वै पुत्रनामाऽसि ।

என்ற சுருதி வாக்கியத்திற்கு என்னபொருள்?

ஆத்மா என்ற பதத்திற்கு என்ன அர்த்தம்?

ரிஷி.— ஆத்மா என்பது ஜீவனும் உடலும் கூடியது.

ஸாரம்.— அது இருக்கட்டும், அந்த சுருதி வாக்கியப்படி பெற்றோனே பிள்ளையாகிறன் என்றது விளங்குகிறதல்லவா? அப்பொழுது தகப்பனுடைய குணமும், கர்மபரிபாகமுதலிய ஸ்வபாவங்களும் பிள்ளைகளுக்கு வருகிறதல்லவா? அப்படி யிருக்கும்போது, தகப்பன் பிராம்மணனுனல் பிள்ளையும் பிராம்மணனுகத்தானே இருக்கவேண்டும். வைசியன் பிள்ளை சூத்ரனுவானு? அப்படி வாதித்தால், சுருதி வாக்கியத்தின் பொருள் மாறுமே.

ரிஷி.— மௌனம் சாதித்தார்.

பண்டிதர் வாதம்.

மூன்றும நாள் ஸ்ரீ ரிஷிஜுமின் பிடிவாதத்தின்பேரில் தஞ்சாவூரிலுள்ள, பிரும்மஸ்ரீகள் P. S. ஸுந்தரமய்யர் B.A.L.T. தன்வந்திரி ஸ்ரீநிவாஸசாஸ்திரிகள், கிரந்தகர்த்தா ஸுப்ரமண்ய சாஸ்திரிகள், பாலஸுப்ரமணிய சாஸ்திரிகள் இவர்களை அழைத்துவந்தேன்.

சாஸ்திரிகள்.— ஜாதிப்பிரிவு முதலிய பெருங்கார்யங்களைப் பற்றிப் பேசுவதற்கு வேதம் நன்றுய் வாசித்திருக்கிறீர்களா?

ரிஷி.— ஏதோ படித்திருக்கிறேன். கேளுங்கள் சொல்லுகிறேன்.

சாஸ்.— இது விளையாட்டல்ல. வாதம் ஆரம்பித்தால் ஸித்தாந்தம் செய்யவேண்டும்.

ரிஷி.— நாம் பேசுவோம். இருக்கிறவர்கள் கேட்கட்டும்.

சாஸ்.— நன்றாய்த்தெரியாதவர்களுடன் வாதம்செய்வது அழகல்ல. பெருங்கார்யங்களை விளையாட்டாகப் பேச ஆரம்பிப்பது தவறு. நாங்கள் பேசத் தயாராகவில்லை.

ரிஷி.— மௌனம்.

இவ்விதம் பல வாதங்கள் செய்தோம். பலன் ஸரியாக இல்லை. கடைசியில் ஒரு கிளைஸபை ஏற்படுத்துவதாக அவரால் முடிவுசெய்யப்பட்டது.

ஆர்ய மதஸ்தர் செய்யவேண்டுவதென்ன?

ஆர்யஸமாஜத்தார் வேரூன்ற இடங்கொடாமல் நாம் நம் குழந்தைகளுக்கு வேதாத்யயனம், ஸந்தியாவந்தனம், அக்னிகார்யம் முதலியவைகள் அநுஷ்டிப்பதற்கு ஏற்ற பிர்மசர்யாச்ரமங்கள் ஏற்படுத்தவேண்டும். அது எப்பொழுது? எப்பொழுது? இனிமேலாவது எழுந்திருங்கள்! ஜாக்ரத! ஜாக்ரத!! ஜாக்ரத!!!

ஸாரம். ரெங்காசாரியர்.

சயனிக்க விதிகள்.

காந்தத்திற்கு, ஆகர்ஷணம் (Positive Pole) திரோதானம் (Negative Pole) என்னும் இரண்டுவிதமான சக்திகளுண்டு. இவ்விரண்டு சக்திகளும் மானிட சரீரத்திலும் உள்ளன. ஓர் காந்த ஊசியை கயிற்றின் நுனியிற்கட்டி அக்கயிற்றின் மற்றொரு தலப்பை நாம் கையில் பிடித்துக் கொண்டால், அந்த ஊசியானது கொஞ்சநேரம் ஆடி, பிறகு வடக்கை நோக்கி நிற்கும். மானிட சரீரத்தையும் அக் காந்த ஊசிக்கு ஒப்பிடலாம். உலகத்தில், பூகோள சாஸ்திரத்திற் சொல்லிய சமரேகை (Equator)க்கு உத்திரப்பிரதேசங்களில் வாசம்செய்கிறவர்கள்

வடக்கே தலையை வைத்துக்கொண்டு படுக்கவேண்டும். பிரான்சு (France) தேசத்திலுள்ள சாஸ்திர சாலையின் வித்துவான்கள் சிரச்சேதம் செய்யப்பட்ட வொரு சரீரத்தைச்சில பரீக்ஷைகள் செய்தார்கள். அச் சரீரத்தின் சிரசு வெட்டப்பட்ட பிறகு, அது உஷ்ணத்துட னிருக்கும்பொழுதே அதைக்கொண்டுவந்து ஒரு சுழியாணியின்மேல் வைத்தார்கள். உடனே அச் சவம் அங்குமிங்கும் ஆடுவதற்கு ஆரம்பித்தது. சிறிதுநேரம் அவ்விதமாடிக்கொண்டிருந்து, அதன்சிரசு வடக்கே நோக்கின் வுடன் அச்சவம் அசைவற்று நின்றுவிட்டதாம். மறுபடியும் அதை வேறுதிக்கில் திருப்பிவிட்டுப் பார்த்தும், அது முன்போலவே வடக்கு முகமாய் திரும்பி நின்றதாம். இவ்வித பரீக்ஷையினுல் மானிட சரீரத்திலும் காந்தத்திற்குள்ள ஆகர்ஷண சக்திகளிருக்கின்றன வென்றும், அவற்றி லொன்று உத்திர திக்கை நோக்கியது. மற்றொன்று அதே முகமானதென்றும் நன்கு ஸ்தாபிக்கப்படுகின்றது. நமது இந்துசாஸ்திரப் பிரகாரம் ஒருவன் கிழக்கு திக்கில் தனதுசிரசை வைத்துப்படுத்தால் அம் மனிதன் மிகவும் கல்வியிற் பயிற்சியுள்ளவனுவான். தெற்கு திக்கில் சிரசு வைத்துப்படுத்தால், விசேஷ பலத்தையும் ஆயுள் விருத்தியையும் அடைவான். மேற்கில் சிரசுவைத்துப் படுத்தால், கெட்ட எண்ணங்களால் கஷ்டப்படுவான். வடக்கு திக்கில் சிரசுவைத்துப் படுத்தால், வியாதியும், சரீராசௌக்கியமுமடைவான். இதற்கிணங்கவே,

தன்னூர் கிழக்கு தங்கினவூர் மேற்கு
வேட்டகத்தூர் தெற்கு வேண்டாதவூர் வடக்கு

என்ற இவ்வசனமு முண்டு. மிக அல்பமாகவும் எளிதாகவுமுள்ள இவ்விதிகளைப் பின்பற்றி நடத்தல் சரீர சாதனத்திற்குற்றதோர் நல்வழியாகும்.

ப. வ. கணபதி சாஸ்திரி.